செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

பிரதி விலை: சதம் 15

சைவபரிபாலனசபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28௳, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ௨] யாழ்ப்பாணம்: சாதாரண௵ ஆவணி ௴ ருஉ வெள்ளிக்கிழமை (21-8-1970) [இல-௨0

# "பாத பங்கயங்கள் போற்றி"

23-8-70 ஞாயிற்றுக்கிழமை

முருகப்பெருமானுடைய திருவடிகள் தாமரைப் பூப்போன்றன. அவை சிந்திப்பவர்க்கு முத்தியை நல்கும். பழவினைகளைப் போக்கும். சிந்திப்பவர்களை இழிந்த நெறியிலே செல்ல விடாமல் மேல் நெறியில் செலுத்துந் தன்மையையுடையன. மெய்யுணர்வை யளிக்க வல்லன. ஆன்மாக்களை முருகப் பெருமானுக்கு அடிமையாக்குந் தகையன. ஆன்மாக்களுக்கு ஆரா அமுதம போன்றன. அத்தகைய ஞானமயமான திருவடிகளை வணங்குகின்றவர்களுக்கு யாதாமொரு கவலையில்லை. அச்சமில்லை. பேரானந்தம் பெற்று பெருவாழ்வு வாழ்வார்கள். அப் பெருமானுடைய செங்கமலப் பொற்பாதங்களை வணங்கித் துதிப்போமாக.

முருகப் பெருமானுடைய திருவடி அகந்தைக் கிழங்கை யகழ்ந்தெடுக்கும். ஆன்மாவின் செயலற இறைவன் செயல் தொழிற்படும்.

நாமற்ற பின்னுதன்
றஞ்செய ருனேயென்
றுந்தீபற
தன்னையே தந்தானென்
றுந் தீபற.



[முருகன் படம் உதவியவர்: திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்.]

புள்ளி...
நன்னெறி யொழுகச் செய்து நவைபறு காட்சி நல்கி
யென்னையு மடியனாக்கி யிருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி.

— கச்சியப்பசிவாசாரியார்

## சைவப் பணி புரிய
### சைவமங்கையர்களை
### உருவாக்கித் தருவாராக

### சைவப்புலவர், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைக் கௌரவிக்கும்போது நல்கிய ஆசியுரை

— வ. செல்லையா —
[தலைவர், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்]

நால்வர் காட்டிய வழியினில் நாவலர் பெருமான் சைவத்தைப் பேணி வந்தார்கள். அவர்கள் பிரமச்சாரியங் காத்தச் சைவத் தமிழை வளர்த்து வந்தனர். நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே? சுருதியெங்கே? என்ற வினைக்களே இன்றும் நம் மத்தியில் எழுந்த வண்ணமே இருந்திருக்கும். அக்குறையை நிறை செய்த பெருமானைப் போற்றி அன்னார் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பல சைவ நிறுவனங்கள் சைவச் சேவை புரிந்து வருகின்றன இவ்வழியில் காரைநகர் மணிவாசகர்சபையும் ஒன்றென மிளிர்வதை யாருமே மறுக்கவோ மறக்கவே முடியாது.

அத்திருச் சபையினர் சைவப் புலவர் பண்டிதை செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஆற்றிய அரும்பெருஞ் சைவச்சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கமுன்வந்துள்ளமை போற்றக் கூடியதே ஈழத்தில் சைவமங்கையர்கள் சைவப்பணி புரிய முன்னிற்பது கண்ணால் காண முடியாத விஷயம். கருத்தால் எண்ணவும் முடியாத தொன்றுமாகும். தமிழ் நாட்டிற் பெரிய புராண காலத்திலிருந்தே சைவ மங்கையர் பணி சமூகத்துக்குக் கிடைத்துவருகின்றது ஈழத்தில் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் காலத்திலிருந்து தான் அந்தச் சகாப்தம் ஆரம்பமாகின்றது.

இல்வாழ்க்கையின் இன்பசுகங்களைச் சைவச் சேவைக்காகத் துறந்து, பிரமச்சாரியத்தைக் காத்துப் புனித மங்கையராகத் தலைசிறவாழும் செல்வியவர்களைப் பெரிய புராணத்துப் பெண்கள் திலகங்களோடு தான் வைத்தெண்ண வேண்டியது. உள்ளும் புறம்பும் ஒருதன்மைக் காட்சியராக அம்மையார் விளங்குகின்றார். அவர் ஈழத்தில் மட்டுமல்ல இந்தியாவிலும் சைவச்சான்றோரால் போற்றப்பட்டு வருபவர் ஆவர்.

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தை உருவாக்கியவர் அவரே. அச்சங்கத்தின் அன்னையார் அவரே தான். பத்தாண்டுச்சேவையையதற்காக ஆற்றிச் சங்கத்தின் பொருளாளருமாக விருந்து ஈழத்துச் சைவ நிறுவனங்களில் முதன்மை பெற்று விளங்க உழைத்து வருகிறார்கள்.

1966ம் ஆண்டு சைவப் புலவர் சங்கக் குழுவினரில் தாமும் ஒருவராயிருந்து, சென்னைச் சைவச்சித்தாந்த மகாசமாஜத்தவரின் வைரவ விழாவிலே கலந்து, சிறப்புச் சொற்பொழிவு ஆற்றித் தமிழ் நாட்டுப் பேரறிஞர்களால பாராட்டுதலும் பெற்றவர் செல்வியவர்களே யாவர். அண்ணாமலைச் சர்வகலாசாலைத் தமிழ் மன்றத்திலும் அது வேளை சிறப்புச்சொற்பொழிவாற்றி ஈழத்திற்குப் பெருமை தேடித் தந்தவர் செல்வியவர்களே யாவர்.

செல்வியவர்கள் தூயவுள்ளம் படைத்தவர், "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகள் வாக்கை இப்புவியில் யாரும் மெய்ப்பியாது போகத்தான் வாழ்ந்து உண்மையெனக் காட்டியவர் அவர்கள் சொல்லும் கேட்பாரைப் பிணிக்கும் தகையதாய்க் கேளாதாரும் வேட்பமொழியும் பான்மையுடையது.

செல்வியாரின் அருங்குண

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

நல்லை.
ஞான சம்பந்தர் ஆதீனத்தில்

## ஆண்டுவிழா

மதுரை ஆதீன இலங்கைக் கிளையாக ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளால் 6-9-66 ஆவணிக் கார்த்திகையன்று நிறுவப்பெற்ற நல்லை.ஞானசம்பந்தர் ஆதீனத்தின் 4-ஆவது ஆண்டு நிறைவு விழா 23-8-70 ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நிகழவிருக்கிறது. அன்று விசேட அபிடேகம் பூசை, ஆராதனை, மாகேசுர பூசை, ஆதியன நிகழும். இரவு 8-30 மணிக்கு ஆதீனத்தின் நூல் நிலையத்தை யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம் பிள்ளை அவர்கள் திறந்து வைப்பார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்களது திருவுருவப்படங்களை யாழ். மாநகரபிதா திறந்துவைப்பார்கள். இசைநிகழ்ச்சியும் நிகழும்.

அருள் நெறித் திருக் கூட்டம்,

## திருத் தல யாத்திரை

திருச்சிராப்பள்ளி அருள் நெறித் திருக்கூட்டம் 19-8-70 முதல் 1-9-70வரை 13 நாட்கள் ஈழநாட்டுத் திருத்தலங்களில் முறையான வழிபாடு செய்வதற்கு வருகின்றது. திருக்கூட்டத்தினர் 44 பேர்கள் (பெண்கள் 21, ஆண்கள் 23) இவர்களில் 13 சிவபூஜா துரந்திரர்கள். சைவ பரிபாலன சபையார் இத்திருக்கூட்டத்தினரை யாழ்ப்பாணத்தில் அவர்கள் தங்கியிருக்கும் காலத்தில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் உபசரிப்பார்கள். இத் திருக்கூட்டத்தினரில் தேவார இன்னிசைப் பாராயணமும் சைவசமய விரிவுரைகளும் நிகழ்த்தக்கூடிய பெரியார்களும் சேர்ந்திருக்கின்றனர்.

திருக்கேதீச்சரம், முனீசுவரம், கதிர்காமம், திருக்கோணேஸ்வரம், நல்லூர், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், நயினாதீவு, காரை சிவன்கோயில், ஆதிய இடங்களுக்கும் விஜயம் செய்வார்கள்.

## தமிழிசை விழா

யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 11-ஆவது தமிழிசைப்பெருவிழா நல்லை. ஞானசம்பந்தர் ஆதீனத்தில் 4-9-70 தொடக்கம் ஏழு நாட்கள்வரை கோலாகலமாக நிகழவிருக்கிறது.

## நல்ல குருவை நாடுக

கொள்ளினும் நல்ல
குருவினைக் கொள்ளுக
உள்ள பொருளுடல்
ஆவி யுடன் ஈக
எள்ளத் தனையும்
இடைவிடாதே நின்று
தெள்ளி யறியச்
சிவ பதந்தானே

நல்ல குருவாக நாடுக; பின்னே உடல், பொருள், ஆவி அனைத்தும் அவர்க்கே உரித்தாகுக. சற்றும் விடாது நின்று தெளிவாக ஞானத்தைப் பெறுக. பிறகு சிவபதம் சித்திக்கும்.

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

# கொக்குவில் குமாரசாமிப்புலவர் ஓர் உண்மைப் பெரியார்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சாதாரணஸு ஆவணி மீ ரு-உ வெள்ளிக்கிழமை [1970]

## சைவப் பணிபுரியும் அம்மையார்

நமது நாட்டில் சைவசமய வளர்ச்சிக்கும் தமிழ் மொழி ஆக்கத்திற்கும அயராது உழைத்து வருகின்ற செஞ்சொற் செம்மணி சைவப்புலவர் பண்டிதை செல்வி. தங்கம்மா அவர்களாற்றிவருகின்ற அரிய தொண்டைக் காரைநகர் மணிவாசக சபையார் 19-8-70 புதன்கிழமையன்று பாராட்டிப் பட்டமளித்துப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்களென்பதை யறிந்து மகிழ்ச்சுயடைகின்றோம. அம்மையார் கேட்பவர்கள் மகிழ்ச்சியுறும் வகையில் சொற்சோர்வின்றி இன்சுவைததும்பும்சொற்களை உபயோகித்து பொருளமைதியுள்ள விரிவுரைகளாற்றுந் தகுதியுடையவர். அவ நடைய சொன்வன்மையையும சமய வறிவையும் இலக்கிய வறிவையும் அறிந்து சொற்பொழிவாற்றுவதற்கு அவரை அழையாத சபையில்லை. எங்கள் சைவபரிபாலன சபை நடத்திவரும் சைவமகாநாடுகளில் அமமையார் மனமுவந்து சொற்பொழிவாற்றுவார்கள்.

தமிழ்நாட்டிலும் சென்னை சைவசித்தாந்த சமாஜம் நடத்துகின்றன சைவமகாநாட்டில் சைவசமயச் சொற்பொழிவாற்றியுள்ளார்கள்.

சைவசமயம் தபத்திற் சிறந்த பெண்களால் பேணப்பட்டதென்பதை யாவரும் அறிவார். திலவதியாருடைய தவம் திருநாவுக்கரசு நாயனாரை சைவ உலகுக்குத்தந்தது. காரைக்காலம்மையார் தமது சிவபக்தியினாலும் கற்பின திண்மையினாலும சைவநெறியைப் போற்றினர் மங்கையர்க்கரசியார் சைவசாதனங்களை தமிழநாட்டில் பரப்புதற்குத் துணையாகவிருந்தார். திருநீற்றினொளியைத் தமிழ்நாட்டில் பரப்பினர் பகவதியார் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை ஈன்றெடுத்தார். இசைஞானியார் மூலமான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராகிய சுந்தரமூர்த்தி நாயனாரை ஈன்றெடுத்தார்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியவர்கள் இங்குக் காட்டிய பெண்குலப் பெருந்தகையாருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி சைவநெறி வளரத் தொண்டுசெய்கின்றார்கள். அவரைப் பாராட்டுதல் சைவசமயம் தமிழ்மொழி எழுச்சிக்கு உறு துணையாகவிருக்கும. தில்லை நடராஜப் பெருமான் அமமையாருக்கு நீண்டாயுளையும் ஆரோக்கியத்தையும் சைவத்தொண்டு புரிதற்குரிய சௌகரியங்களையும் குறைவின்றி நல்குவாராக.

## வேலனைப் பணி மனமே!

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

வேலனைப் பார்வதி பாலனை நினைந்திட
வேதனை தீரும் மனமே — நல்லூர் (வே)

அநுபல்லவி

கால காலன் காதில் பிரணவ
மூல மந்திரம் மொழிந்த குருபர (வே)

சரணம்

கானல் நீரெனும் காமிய வாழ்வு
காற்றில் பஞ்செனக் காட்டும் தாழ்வு
ஞான மாமர நிழலில் தூங்கலாம்
நாடும் பேரின்ப வீடும் வாங்கலாம். (வே)

—அளவையூர். "அருட்கவி" சி. விநாசித்தம்பிப் புலவர்

## புலவர் படத் திறப்புவிழாவில்

### பரமேசுவரக் கல்லூரி அதிபர்

'நமது நாட்டில் சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெரியார்கள் வரிசையைச் சேர்ந்தவர் கொக்குவில் திரு. த. குமாரசுவாமிப் புலவர். இந்த நாட்டில் சைவப்பிரசங்கள்கள் புராண படனங்கள் நடைபெற முயற்சி செய்த பெருமை புலவர் அவர்களையே சேரும. கிருபானந்த வாரியார் போன்ற பெரியார்களை யெல்லாம் நமக்கு அறிமுகஞ் செய்து வைத்த சைவப் பெரியார் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் நாற்பத்தெட்டாண்டுகளுக்கு முன் நாவலர் வழியைப் பின்பற்றி, நல்லதொரு சைவப் பாடசாலையான கொக்குவில் ஞான பண்டித வித்தியாசாலையை ஸ்தாபித்தார். சிறந்த சைவ - தமிழ்ச் சேவையாற்றிய நல்ல புத்திமானான கொக்குவில் குமாரசுவாமிப் புலவரவர் ஓர் உண்மைப் பெரியாராவர்.'

கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை ஸ்தாபகரான புலவர் திரு த குமாரசுவாமிப்பிள்ளையின் உருவப் படத்தைத்திறந்து வைத்துப்பேசிய பரமேஸ்வரக் கல்லூரி அதிபர் திரு. ஞானப்பிரகாசம மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

கொக்குவில் இந்துக கல்லூரி உப அதிபர் திரு. ஏ. ஆர். இராசநாயகம் தலைமையில் கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில் நடைபெற்ற பெற்றோர் தின விழாவில் இடம்பெற்ற இப படத் திறப்பு விழாவில் திரு. மு. ஞானப்பிரகாசம் தொடர்ந்து மேலும பேசுகையில் "திருப்பணிகளில் மிக்க விருப்புடையவரான குமாரசுவாமிப் புலவர் அவர்கள் ஈழத்தில் மட்டுமன்றி பர்மா, மலாயா போன்ற நாடுகளிலும சைவ தமிழ்ப் பயிரை வளரச் செய்தார் புறக்கரணங்களான ஐம பொறிகளையும், மனம் புத்தி ஆகிய உட்கருவிகளையும் தந்த தலைவராகிய இறைவனின் நோக்கை உணரக்கூடிய ஆற்றல் படைத்த ஒருவா நம்மிடையே வாழ்கிறார் அவர்தான் எங்கள் மதிப்புககுரிய குமாரசுவாமிப புலவர் அவர்கள். குமாரசுவாமிப் புலவர் சேவையைப் பாராட்டி அவரது உருவப் படத்தை இந்தப் பாடசாலையில் திறந்து வைத்தால் மட்டும் போதாது. அகில இலங்கை ரீதியாக புலவர் பெருமானுக்கு விஸ்தாரமான முறையில் பாராட்டு விழா நடத்த வேண்டும்; படத் திறப்புவிழா நிகழ வேண்டும். புலவர் நிறை செல்வம் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல பரமேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றேன்" என்றார்.

ஞானபண்டித வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. த தர்மலிங்கம் யாவரையும் வரவேற்றுப்பேசியதுடன், பாடசாலை அறிக்கையையும் வாசித்தார்.

தலைவர் திரு. இராசநாயகம் தமது தலைமையுரையில் "நான் தென் இந்திய நண்பர்களுடன் உரையாடும் சந்தர்ப்பம் ஏற்பட்ட போது என்னுடைய ஊர் கொக்குவில் என்றேன். அப்பொழுது என்னுடன் பேசிய அறிஞர்கள் குமாரசுவாமிப் புலவர் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் கொககுவில் என்ற புண்ணிய பூமியா உங்கள் ஊர் என்றார்கள் இதில்இருந்தே புலவர் அவர்களின் பெருமைவிளங்குகிறது. என்றார்

திரு. த. குமாரசுவாமிப் புலவர் பேசுகையில், 'இந்தப் பாடசாலை ஸ்தாபிகக யான் பெரு முயற்சி செய்யக் காரணம் நமது சைவக் குழந்தைகள் சைவப் பாடசாலையிலேயே ஆரம்பக் கல்வியைக் கற்க வேண்டும் என்ற அவாவே. தொடங்கிய பணியை நிறைவேற்ற இடையிடையே பல குறுக்கீடுகள் தடைகள் ஏற்பட்டன புதுக்கக் கட்டிய பாடசாலையைப் பதிய முடியாமற் செய்பட்ட சூழ்ச்சிகள் பல இவற்றையெல்லாம் முறியடித்து இந்த ஞானபண்டித விதியாசாலையை ஒரே காள் முயற்சியில் பதிவித்துக் கொடுத்த பெருமை சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களையே சார்நதது. அவர்களது நல்ல முயற்சியாலேயே எனது எண்ணம நிறைவேறியது' என்றார்.

செனட்டர் த. நீதிராசா பேசுகையில் 'எமது கிராமத்தில பல வசதிகளோடும் கூடிய ஞானபண்டித வித்தியாசாலையை ஸ்தாபித்த குமாரசுவாமிப் புலவர் ஐயா அவர்களது திருவுருவப் படத்தை யாம் எப்பொழுதோ திறநது வைத்திருக்க வேண்டும். காலந் தாழ்ந்து செய்தாலும் யாம் இன்று எடுத்துக்கொண்ட முயற்சி மிகவும் உன்னதமானது. யான் ஆரம்பக் கல்வியைப் பெற்ற ஞான பண்டித வித்தியாசாலையை யான் என்றுமே மறந்ததில்லை. எனக்கு நல்ல ஆரம்பக் கல்வியைத் தந்த ஞானபண்டித வித்தியாசாலைய ஸ்தாபிதத குமாரசுவாமிப் புலவர் ஐயர அவர்கள் எனக்கு நலல ஞான குருவாயும் அமைந்தார்கள். நான் இவ்வளவுக்கு முன்னேறுவதற்குக் காரணம் புலவர் ஐயா அவர்களது தூய ஆசீயாகும். இப்படியான சிறந்த பெரியாரான புலவர் ஐயாவைப் பாராட்டக்கூடிய வகையில் பெற்றோர் தின விழாவை ஒழுங்கு செய்த வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு. த. தர்மலிங்கம் அவர்களது அரிய சேவையை மனப்பூர்வமாகப் பாராட்டுகின்றேன்' என்றார்.

புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் திரு. கு. வி. செல்வத்துரை பேசுகையில் 'எமது நாட்டிலுள்ள ஆரம்ப பாடசாலைகள் எந்தவகையிலும் தரத்தில் குறைந்தவையல்ல. மிகவும் குறைந்த அறிவுடன்வரும் ஒரு குழந்தை ஆரம்ப பாடசாலை ஆசிரியனிடம் கற்று பெரிய மேதாவியாய் வருகின்றான். அப்படியான ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களை பெற்றோர்களும் மாணவர்களும் உயர்ந்த அந்தஸ்தில் வைத்துப் போற்ற வேண்டும். அதே போல ஆசிரியர்களும தம்மிடம் கற்க வரும் குழந்தைகளிடம் அககறை செலுத்திக் கற்பிகக வேண்டும். எத்தனையோ பெரும் தவம் இருந்து பெற்ற பிள்ளைகளை எம்மைநம்பி எம்மிடம் ஒப்புவித்துளளார்கள் என்பதை ஒரு போதும் மறக்கக் கூடாது' என்றார்.

பழைய மாணவர்கள் சார்பில் ம. சர்வானந்தன் சுகாதார சேவையாளர், திரு க. பஞ்சாட்சரம் ஆகியோரின் பேச்சையடுதது மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கபபட்டன ஈற்றில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் 45-ஆம் நாள் மண்டலாபிஷேக விழா

மண்டாபிஷேகவிழா 23-8-70 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும் அன்று பகல் ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு நவோத்ர சகஸ்ர 1008 சங்காபிஷேகமும், அம்பாள், நடராஜர், ஐயனர் ஆகிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேகங்களும் நடைபெறும் இரவு பஞ்சமூர்த்திகள் தண்டிகையில் எழுந்தருளுவார்கள். இதை காரைநகர் தங்கோடை வே. க. நாகமுத்து உபயமாகச் செய்கிறார்கள்.

மண்டலாபிஷேக விழாவித்கு விஷேச இ. போ. ச.பஸ்சேவை 22, 23 ம் திகதிகளில் ஒழுங்குகள் செய்திருக்கிறார்கள் இரு நாட்களுக்கும் இ. போ. ச பஸ்கள் சிவன் கோவிலுக்கு நேரடிச் சேவைசெய்யும். (ந. நீ.)

## வல்வை சிதம்பாக் கல்லூரி

(3-ம் பக்கத்து வளர்ச்சி)

பாலேந்திரராணி K. ஞானம்பிகை

திருமுறை: ஆண்கள்

கீழ்ப்பிரிவு: செல்வன் மு. ரஞ்சன், கி. தில்லைநாதன்

பெண்கள் மேற்பிரிவு: செல்விகள் இ. யசோதா, ந தனலசுமி

கீழ்ப்பிரிவு: செல்விகள் இ. அழகா, க. ஜெயராணி,

## வல்லை சிதம்பாக் கல்லூரி பேச்சுப் போட்டி திருமுறை ஓதற்போட்டி

வல்லை சிதம்பரக் கல்லூரியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப்பெற்றபோது, திருமுறை ஓதல், பேச்சு வன்மைப் போட்டிகளும் இடம்பெற்றன.

பரிசில் பெற்றவர்கள்:

பேச்சு: ஆண்கள்.

மேற்பிரிவு: செல்வன் சு. சக்திவடிவேல், செல்வன் சி கிருஷ்ணமூர்த்தி,

கீழ்ப்பிரிவு: செல்வன் பொ. தேவராசா, செல்வன் இ அருணசலம்

பேச்சு: பெண்கள், மேற்பிரிவு: செல்விகள் சு. மங்களேஸ்வரி, வே. வான்மதி

கீழ்ப்பிரிவு: செல்விகள் A

வளர்ச்சி 2 ஆம் பக்கம்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோடு

இல. MB 10716

இராமலிங்கம் ரேட்டு. திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம், தற்போது சடையம்மா மடம், நல்லூர், யழ்ப்பாணம் குட்டிப் பிள்ளை நடராசா

— வழக்காளி

எதிராக

1. திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம், சின்னத்துரை இரத்தினசபாபதியும்
2. பெண் தங்கம்மாவும்

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB 10716-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1970-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 13-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3458/- -ம் 27-3-69 தொடக்கம் 6-10-69 வரைக்கும் ரூபாய் 2500/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 288/30.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர்க்கோவிற் பற்று திருநெல்வேலி யிறை "எழுவத்தை" நில பர 4 இதில் தென் கிழக்கு மூலையில் ஆடுகால் இருக்கும் நிலம் பிறநீங்கலாகவும் ஞான வயிரவ கோவிலுக்கு விடப்பட்ட நில. பர. ½ பிற நீங்கலாகவும் மிகுதி நடுப் பகுதியில் நில பர, 3 இதற்குரிய தென் கிழக் கெல்லையில் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் பயிர் வகைகளும் எல்லை கிழக்கு கையொழுங்கையும் ஞான வயிரவ சுவாமி கோவிலுக் கொதுக்கப்பட்ட நிலமும் வடக்கு கையொழுங்கை மேற்கு விநாயகமூர்த்தி பெண் வேதநாயகத்திற்கும் கதிரவேலு பெண் மனோன்மணிக்குமுரியவாதனம் தெற்கு செல்லத்துரை பெண் தங்கமுத்துவிற்தும் பங்காளருக்குமுரியவாதனம. இதடங்கலும் முழு உரித்துக்களும். ஆனுல் இவ்விபரங்களடங்கிய காணியிலும் அதன் உரிமைகளிலும் கிழக்குப் பக்கத்திலிருக்கும் கையொழுங்கையிலிருந்து குறித்த ஞானவயிரவசுவாமி கோவிலுக்கு வணக்கம் செய்யப்போகும் உரித்து பிற நீங்கலாக.

பதிவு D307/284

இ. சு தர்மரத்தினம்
கொமிஷனர்விலை & மதிப்பாளர்

239 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பொன்னுசாமி கனகலிங்கமும் பெண் இந்திராதேவியும் ஆடியபாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.

இல. M. B. 10315 எதிராக —வழக்காளிகள்

கந்தையா வைரவநாதன் நல்லூர் யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10315-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஆடு புரட்டாதி 17-ஆந் திகதி (17-9-70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 15560/-ம், 24-9-68 தொடக்கம் 11-6-69 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 12வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 472-40

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை 'களஞ்சியர் தோப்பு' நில. பர 15 குளி 1, 1/8 ஷை காண் நில பர. 11 குளி 8. 41/48 இரண்டும் சேர்ந்து நில 26 குளி 9, 41/48 இதில் கிழக்குப் பக்கமாக நில. பர. 5ம், நிலமும் பயிர்வகைகளு தொகே இருக்கும ரேட்டிலிருந்து வடக்கே ஆடியபாதம் வளவு எண்ணும் காணிக்கூடாக போகும் 12 அடி அகல ஒழுங்கைப் பாவிப்புரித்தும். இந்த நில. பர 5க்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வல்லிபுரம் செல்லப்பாக்கியதனம், மேற்கு பொதுவாக விடப்பட்ட ஒழுங்கை. தெற்கு அம்பலவாணர் செல்லையாவுக்கும் பெண் தங்கம்மாவுக்குமுரிய ஆதனம். இதடங்கலுமதைச் சேர்ந்தவைகளும் பதிவு இல: D. 299/172

22, கோவில் வீதி
யாழ்ப்பாணம்.

நீ. அன்ரனிப்பிள்ளை,
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
எம் 216 21-8-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில். வழ இல: 10714

1. விசுவலிங்கம் தங்கராசா
2. பெண் அன்னம்மா, கரணவாய் வடக்கு

எதிராக வழக்காளி

செம்பர் சுப்பிரமணியம், கரணவாய் தெற்கு —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1970-ம் ஆடு ஐப்பசி மீ 21-ம் திகதி (21-10-70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டி கோவிற்பற்று உடுப்பிட்டி கரணவாய் இலகாமம் குறிச்சி "கூடல்" நில. பர 35 இதில் 4ம் நம்பர் துண்டு வாட்டிசன்படி நில. பர. 2 குளி 13. 2/32 எல்லை கிழக்கு செல்லையா பெண் யோகேஸ்வரிக்கும் பொன்னர் முருகேசுவுக்கும் உரிய ஆதனங்கள் வடக்கு ஐயா பொன்னையாவுக்குமுரிய ஆதனம், மேற்கு கார்த்திகேசு கிருஷ்ணபிள்ளைக்கும், வழியும் தண்ணீர் ஓடும் வாய்க்காலும் தெற்கு கார்த்திகேசு மாணிக்கருக்கும் மற்றுமேருக்கும் உரிய ஆதனம். இதில் சொரியலாய் நில பர. 1 குளி 4, 2/32 யும் இதற்குரிய வழி, வாய்க்கால் கிணற்றுப்பங்கும் கிணைகளும் இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 1875/-

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை: | — — | 1466-25 |
| ரூபா 750/- 12% வட்டி 20-11-69 — 24-2-70 வரை | | 22-00 |
| ரூபா 1488-85 5% வட்டி 24-2-70 — 5-8-70 வரை | | 34-00 |
| | | 1522-25 |
| | செலவு | 190-90 |
| | | 1713-15 |

"சந்நிதி வேல்"
பருத்தித்துறை,
12-8-70

கா. முத்துக்குமாருஐயர்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
எம் 215. 21-8-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கந்தையா குமாரசாமி வட்டுக்கோட்டை மேற்கு —வழக்காளி

வழ: இல. M. B. 9861 எதிராக

(1) வேலு இரத்தினமும் பெண் (2) இராஜபாக்கியமும் இருவரும் வட்டுக்கோட்டை மேற்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9861 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகளை 1970-ம் ஆடு ஐப்பசி ஒக்ரோபர் மாதம் 5-ந் திகதி (5-10-70) திங்கட்கிழமை காலை 10 மணிதொடக்கம் ஒன்றன் பின் ஒன்றாக முறையே 1-ம், 2ம், காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 5400/-ம், 26-3-68 தொடக்கம் 3-9-68 வரைக்கும் ரூபா 3000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 438-96 சதமும் இதில் கொடுபட்ட ரூபாய் 1150/- குறைக்கப்படும்

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கிறை "நரிதின்னி" வரகுச் செய்கை நிலப்பரப்பு 3ம், 7 குளியும் (3 Lms. V. C. & 7 Kls) அதிலுள்ள வீடும், கிணறும் வான் செய்பயிர்களும், எல்லை கிழக்கு செல்லத்துரை பெண் பாக்கியத்தின் ஆதனம் வடக்கு ஒழுங்கை, மேற்கு கணபதிப் பிள்ளை சுந்தரம்பிள்ளையின் ஆதனம, தெற்கு சரவணமுத்து பொன்னுச்சாமிக்கும், குருசாமி பெண் அமுதம்மாவுக்குமுரிய ஆதனம், இதிலுள்ள கிணற்றின் மூன்றிலொரு பங்கும் தூர்வை வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் கிழக்கெல்லைக் காணிக்கும் கிணற்றின் எஞ்சிய மூன்றில் இரண்டு பங்கின் மூன்றிலொரு பங்கும் தூர்வையும் வழிவாய்க்காலும் மேற்கெல்லைக் காணிக்கும் உரித்தாகவும் பிற நீங்கலாக இது முழுவதும் இது E. 345/38ன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

(2) மேற்படி இறை 'நரிதின்னி' வரகுச் செய்கை நிலப்பரப்பு 3 7 குளியும் (3 Lms. V. C. & 7 Kls) வீடும், கிணறும் வான் செய்பயிர்களும் எல்லை கிழக்கு செல்லத்துரை பெண் பாக்கியத்தின் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு கணபதிப் பிள்ளை சுந்தரம்பிள்ளையின் ஆதனம், தெற்கு சரவணமுத்து பொன்னுச்சாமியினதும் குருசாமி பெண் அமுதம்மாவினதும் ஆதனம், இதிலுள்ள கிணற்றின் மூன்றிலொரு பங்கும், தூர்வை வழிவாய்க்கால் பாவிப்புரித்தும், கிழக்கெல்லைக் காணிக்கும், கிணற்றின் எஞ்சிய மூன்றில் இரண்டு பங்கின் மூன்றிலொரு பங்கும் தூர்வை வழிவாய்க்காலும் மேற்கெல்லைக் காணிக்குரித்தாகவும் பிற நீங்கலாகவும் இது முழுவதிலும் சொரியலாய் ஒரு பரப்பும், 7 குளியும் (1 Lm. V. C. & 7 Kls) இது E. 345/39ன் கீழ் பதியப்பட்டது.

173, குருசோவீதி, கண்டிக்குளி
யாழ்ப்பாணம், 3-8-70

க சரவணமுத்து
கொமிசனர் & விலைமதிப்பாளர்
எம். 218 21-8-70

# கந்தரலங்காரநூல் வெளியீடு

நல்லூர் முருகன் திருவிழாவை முன்னிட்டு, அருணகிரி நாத சுவாமிகள் பாடிய 'கந்தரலங்காரம்' என்னும் நூலை கொழும்பு சைவசித்தாந்த வித்தகரும், பிறக்டருமாகிய காலஞ்சென்ற திரு. மு. திருவிளங்கமவர்கள் எழுதிய உரையோடு யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகத்தினர் 10-ஆந் திருவிழாவன்று வெளியிட்டனர். அதன் விலை ரூபா 2-50. விரும்புவோர் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 411/1-ம் இலக்க இல்லத்திலுள்ள கழக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

காரைதீவு கிழக்கு சீனிவாசகம் தாமோதரம்பிள்ளை கைம்பெண் மீனாட்சிப்பிள்ளை —வழக்காளி

வழ: இல. M B 10753 எதிராக

காரைதீவு மேற்கு சிதம்பரப்பிள்ளை நவரத்தினம் —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10753-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டு காணிகளை 1970-ஆம் ஆடு ஐப்பசி மாதம் 3-ஆம் திகதி (3-10-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 6545/— இதில் ரூபா 6545/— க்கும் 8-4-69 தொடக்கம் 11-3-70 வரைக்கும் 100 க்கு 6 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 562-75; செலவழித்த செலவு ரூபா 424-65 வெலியாத்துச் செலவு ரூபா 75/- எதிர் வரும் செலவு ரூபாய் 63-10.

1 வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக தீவுப் பகுதி காரைதீவு கோயிற்பற்று காரைதீவு மேற்கு தங்கோடை இறை ஆவரம்பிட்டி பர. வில. 4½ ஷை ஆவரம்பிட்டி பர வில 13 இரு பிரிவுகளும் கூடி பர வில 17, 1/2, பதினேழரையும் பனைகள் வடலிகள செய்பயிர் வான்பயிர்களும் காணிகருள் அடங்கியிருக்கும் வீட்டில் அரைவாசியும் எல்லை கிழக்கு சுப்பிரமணியர் பொன்னம்பலத்தினுதனம், வடக்கு கையொழுங்கை. மேற்கு ரோட்டும் எதிரியினுடைய ஆதனமும். தெற்கு எதிரியினுடைய ஆதனம். இதடங்கலில் தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் இறை வாய்க்காலும் வழிப்பாவிப்புரித்தும்.

2. காரைதீவு மேற்கு தங்கோடைஇறை 'கத்தன் காடுவயல்' பர நெல் 18 குளிகள் 4 ம் ஷை இறை கத்தன்காவயல் பர. நெ. 12, 1/4 இரு பிரிவுகளும் சேர்ந்து பர நெ 30 குளிகள் 7 இதில் வடக்குப் பக்கமாக பர நெ 20 குளிகள் 7 க்கும் எல்லை கிழக்கு முருகேசு கைம் பெண் தெய்வானையினதும் சுப்பிரமணியம் மூத்தையாவினது ஆதனங்கள். வடக்கு சோமசுந்தரம் பெண் மகாலெட்சுமியினதும் கந்தப்பு பொன்னையாவினது ஆதனங்கள். மேற்கு சண்முகம் கதிரவேலுவினுதனம். தெற்கு செல்லையா மாணிக்கவாசகரும் வேலுப்பிள்ளை பெண் இராசம்மாவின் உருமைக்காரரின் ஆதனங்கள். இதடங்கலும்.

க. சுப்பிரமணியம்

நம்: 24, 1-ம்குறுக்குத் தெரு, கொமிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 12-8-70 M. 223 21-8-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஆறுமுகம் சோமசேகரம் கைம்பெண் செல்வ லக்ஷ்மி தங்கோடை காரைநகர் —வழக்காளி

வழ: இல M. B. 9776 எதிராக

1. வேலுப்பிள்ளை விசுவலிங்கமும் 2. பெண் நாகம்மா இருவரும் காரைநகர் வடக்கு காரைநகர் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9776-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1970-ஆம் ஆடு புரட்டாதி மாதம் 23-ம திகதி (23-9-70) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிகுள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 6,545-80 சதம். 1-3-68 தொடக்கம் 6-8-68 வரைக்கும் ரூபா 5,000.க்கு 10% வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 445-20 சதம். செலவில் கோடுக்கப்பட்ட ரூபா 150/-ம் 250/-ம் (ரூபா 400/-) குறையு.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு வடக்கிறை "ஜவானை" நிலப்பரப்பு 7. ஆனுல் அளவின் பிரகாரம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 7 குளிகள் 5-ம மூதிர்ந்த பனைகளும் சிறிய பனைகளும் வேப்பமரங்களும் மற்றும் செய்பயிர் வான் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு தம்பு அருளையாவுக்குரிய ஆதனம். வடக்கு செல்லையா அருளம்பலத்திற்கும் வேலுப்பிள்ளை பெண் வேதமங்கையின் உரிமைக்காரரின் ஆதனங்கள். மேற்கு வேலுப்பிள்ளை பெண் வேதமங்கைக்கும் குருநாதர் செல்லையாவுக்குமுரிய ஆதனங்கள் தெற்கு குருநாதர் செல்லையாவுக்குரிய ஆதனமும் ரோட்டும் யாழ்ப்பாணம் காணிப் பதிவு C. 325/76

22. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

வே. கோபாலபிள்ளை
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
எம் 220 21—8—70.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

(1 மயில்வாகனம் இராசையாவும்
(2) பெண் சின்னத்தங்கச்சியும் இருவரும்
வண்ணார்பண்ணை வடமேற்கு —வழக்காளிகள்

இல: M B 8394 எதிராக

(1, முகம்மது அப்துல்காதிர் முஸ்தப்பாவும்
(2) பெண் சதிபாவும இருவரும்,
வண்ணார்பண்ணை வடமேற்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8894-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ௵ ஒக்ரோபர் (ஐப்பசி) மீ 1-ம் உ (1–10–70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: - முதல் வட்டி ரூபாய் 2306–25 சதமும் 2–3–67 தொடக்கம் 29–3–68 வரைக்கும் ரூபாய் 1500/–க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 389–65 சதமும் இதில் கொடுபட்ட ரூபாய் 125/– குறைக்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "மட்டியிட்டபுலம்" நிலப்பரப்பு குளி 8 (8 Kls) எல்லை கிழக்கு மீராசாய்பு பெண் மீராநாச்சியாவுடைய காணி வடக்கு முகம்மது கனி பெண் நசீன் நாச்சியாவுடைய காணி மேற்கு ரோட்டு, தெற்கு சொல்லப்பட்ட பாதை இதிலுள்ள கட்டிடமும் வடகிழக்கில் உள்ள கிணற்றின் பங்கும் இது முழுவதும். இது D 258/81 ன் கீழ் பதிவுபெற்றது.

க. சரவணமுத்து
173, குருசோவீதி சுண்டிக்குளி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 15-8-70 எம். 217 21-8-70

---

## COMMISSION SALE

## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்றிக் கோட்டில் வழ, இல. 9930
1. சபாரெட்டினம் சிவப்பிரகாசர், புலோலி மேற்கு,
பருத்தித்துறை —வழக்காளி

எதிராக

1. சுந்தரக் குருக்கள் சோமஸ்கந்தக் குருக்கள்
2. பெண் மதனகாமேஸ்வரி அவபாள், அல்வாய் வடக்கு

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனங்களை 1970 - ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15-ம் திகதி (15 – 10 — 1970) வியாழக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் குறித்த ஆதனமிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு கோப்பாய் கோவிற்பற்று (2) கோப்பாய் தெற்கிறை காணும்பிராயன் நில: 36½ இதற்கூடாக கிழக்கு மேற்காகச் செல்லுகின்ற ரோட்டுத்தெரு வடக்குப் பக்கமாக நி பர. 26 குளி 7 இதன் கிழக்குப் புறமாக நி ப. 7 நீக்கி மேற்குப் புறமாக நி. பர. 19 குளி 7, எல்லை கிழக்கு மேல நீக்கப்பட்ட பாகம், வடக்கு ஷேக்குரிய நிலம், மேற்கு கப்புத்துரை பெண் செல்வ ரெத்தினம் உரிமைக்காரருக்குரிய வாதனம், தெற்கு ரோட்டு, இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதும் (மதிப்பிட்ட விலை ரூபா 24 430)

2. வடமாகாண டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்வடவேலிக் கோவிற்பற்று அல்வாய் மாப்பாண குறிச்சியிறை ஊளவியார் மணல் நி. பர. 18, 3/8 இதில் மேற்குப் புறமாக மூன்றில் இரண்டு பங்கும், ஊளவியார்மணல் நி பர. 5½, ஊளவியார்மணல் நி. பர. 5½ கூடிய நி. பர 22¾ இதில் நில. பர. 18 குளி 7 ல் ஊடான கைபொழுங்கைக்கு தெற்குப் புறமாகவுள்ள நிலத்தில் எறக்குறைய நி, ப. 3 இதில் மேற்குப் புறமாக ஐந்தில் நாலு பங்குக்கு நி. ப. 2 குளி 7 1/5, தென்னைகள். கல்வீடு கிணறு மடப்பளி, சவுக்கண்டியும், எல்லை கிழக்கும், மேற்கும் சிதம்பரக் குருக்கள் சுப்பிரமணிய ஐயருக்கும் மறுபேருக்குமுடையவாதனம் வடக்கு கைபொழுங்கை தெற்கு சுப்பிரமணியஐயர் பெண் மனோன்மணிக்குரிய ஆதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், தென்னைகள், கிணற்றின் சொரியல் கரை வாசியும் கல்வீட்டின் கிழக்கறையும் மடப்பளி சவுக்கண்டி நிந்தமாகவும் வடக்குப் புறமாக புதிதாகக் கட்டுவித்த கல்வீட்டின் மேற்கரைவாசி நிந்தமாகவும். (மதிப்பிட்ட விலை ரூபா 4000/–)

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை: ... | ரூபா | 8515 00 |
| வட்டி ரூபா 8046/–க்கு 8 வீதப்படி 30-1–68 தொடக்கம் 29–7–68 வரை | | 321 84 |
| வட்டி ரூபா 8836/–க்கு 5 வீதப்படி 30–7–68 தொடக்கம் 30-3–70 வரை | | 687 58 |
| | | 9524 42 |
| வட்டி ரூபா 9524/–க்கு 5 வீதப்படி 30–3–70 தொடக்கம் 15–10–70 விற்பனவுத் திகதி வரை | | 257 92 |
| செலவு தொகை ரூபா 310–90ல் ரூபா 150 கழித்து | | 160 90 |
| | மொத்த ரூபா | 9943 24 |

க. நல்லலிங்கம்
ஏல விற்பனையாளர் & விலைமதிப்பாளர்.
சிவலிங்கநிலயம்,
வி. மு. ரோட்,
பருத்தித்துறை, 13–8–70. எம். 214 21—8—70.

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நானமறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 21—8—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M B 11027
அச்சுவேலி, சின்னத்துரை ஜோர்ஜ் நவரத்தினராசா —வழக்காளி

எதிராக

கதிரிப்பாய், அச்சுவேலி
சின்னத்தம்பி செல்லத்துரை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11027-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1970-ம் ௵ புரட்டாதி மாதம் 21-ம் திகதி (21-9-70) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: - ரூபாய் 1475/–ம் 9–8–69 தொடக்கம் 12–2–70 வரைக்கும் ரூபாய் 1000/–க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 367-41 சதமும்இவற்றில் ரூபா 1000/–ம் மீதி வட்டி முதல் கணக்கால் கோட்டில் கட்டிய ரூபா 400/–ம் செலவில் ரூபா 100/–ம் கழிக்கப்படவேண்டும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி, அச்சுவேலி கோவிற்பற்று கதிரிப்பாய் இறை 'கொல்லன்கலட்டி' நிலப்பரப்பு 4. குளி 16½ கிணறும் எல்லை கிழக்கு கணபதி சின்னவனின் ஆதனம், வடக்கு ஒழுங்கையும், தம்பர் தாமோதரம்பிள்ளையின் ஆதனமும், மேற்கும், தெற்கும் ஒழுங்கை, இதடங்கலிலும் சொரியலாக அரைப் (½) பங்கு

செ. பாண்டித்துரை
கொம்மிஷனர், விலை மதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலதாரர்
மல்லாகம், 10-8-70
எம் 224. 21-8-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 10510
இராமபிள்ளை தளையசிங்கம்
தெல்லிப்பளை கிழக்கு —வழக்காளி

எதிராக

ஆறுமுகம் சங்கரப்பிள்ளை
காங்கேசன்துறை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10510ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1970 - ஆம் ஆண்டு செப்டெம்பர் (புரட்டாதி) மாதம் 7-ம் திகதி (7–9–70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்றுபிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபாய் 10784/–வும் பின் 31–12–68 தொடக்கம் 2–8–69 வரை ரூபா 7250/-க்கு 9 வீத வட்டியும் பின் இறுபடும்வரை 5 வீத வட்டியும கோட்டுச்செலவு ரூபா 529-65 சதம்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு வீமன்காமம் தெல்லிப்பளை கோவிற்பற்று "சிலும்பிலியை" ப நி. 59ம், கிணறும் வீடும் செய்பயிர்களும் எல்லை கிழக்கு விநாசித்தம்பி குருநாத பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு மாவிட்டபுரம் கிராமஒழுங்கையும், ஒழுங்கை முகப்பும சின்னத்தம்பி கைம்பெண் தெய்வானைப்பிள்ளைக்குரிய ஆதனம், மேற்கு செல்லையா பெண் அன்னம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு ஒழுங்கையும் வைத்திலிங்கம் கைம்பெண் தங்கத்துக்குரிய ஆதனம் இது அடங்கலில் சொரியலாய் 1/3 பங்கு. பதிவு இல: யாழ்ப்பாணம் H 273/164

2. மேற்படி இறை 'கிரியிட்டி' பர. நி, 6¼ம் வாணம்பயிர் செய்பயிர்களும் கிணறும் எல்லை கிழக்கு விநாசித்தம்பி கனகசபையின் ஆதனம், வடக்கு ஆறுமுகம் சங்கரப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், மேற்கு ரோட்டு தெற்கு ஒழுங்கை இந்தக் கிணற்றில் மறு காணிக்காரருக்கு பாதை வழிவாய்க்கால் பாவிப்பு உருத்து புற நீக்கல் மிகுதி அடங்கலும் பதிவு இல: யாழ்ப்பாணம் H 273/165

சி. செ மாரிமுத்து
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
ஏலத்தாரர்.
'விதானை வளவு"
சித்தன்கேணி. 16-7-70.
M. 221 21-7-70

---

### நேயர்கள் நெஞ்சம்

இந்துசாதன ஏட்டைவாசித்து வருபவர்களில் யானும் ஒருவன் இதில் வெளிவரும் 'பத்தர் - சித்தர்' என்ற பகுதி மக்களின் சிந்தனையைத் தூண்டக்கூடிய ஒன்றாகவுள்ளது. இதனை எழுதும் அன்பரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இந்துசாதனத்தில் மாணவர் பகுதியைத் திரும்பவும் தொடங்குதல் மாணவர்க்கு நன்மை பயக்குமென எண்ணுகின்றேன். நாவலர், சங்கராச்சாரியர், விபுலானந்தர் முதலியோரின் மணிமொழிகள் வெளிவருவதையும் விரும்புகின்றேன்.

இங்ஙனம்
சு. பஞ்சாட்சர ஐயர்
(ஆசிரியர்)
ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில், 105 பலமுயவீதி,
களுத்துறை. 14-8-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B 7458
கணபதிப்பிள்ளை தருமலிங்கம்
வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம், —வழக்காளி

எதிராக

1. (இறந்த) பொன்னுத்துரை ஏகாம்பரம்
2. பெண் சரஸ்வதி அம்மா வண்-மேற்கு
தற்போது வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7458ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ம் ௵ ஆவணி மாதம் 30-ம்திகதி (30–8–70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 9055/-ம், 3–6–65 தொடக்கம் 12-11-66 வரைக்கும் ரூபாய் 5300/-க்கு 12 % வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 473-90

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணை வடகிழக்கு வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை இறை பருத்தோலை வளவு நி. பர. 2. குளி 15 வீடும் கிணறும் செய்பயிரும எல்லை கிழக்கு சின்னத்தம்பி இராசகோபால் பஞ்சாட்சரத்துக்கும் உரிமையான ஆதனம், வடக்கு செல்லப்பா நடராசா சங்கரப்பிள்ளை நடராசாவுக்கும் உரியவாதனம் எல்லை மேற்கு எதிரியின் ஆதனமும் சங்கரப்பிள்ளை நடராசாவுக்கும் காங்கேசன்துறை ரோடும, தெற்கு வைத்திலிங்கம் சிசுப்பிரமணியத்துக்கும் காங்கேசன் துறைரோட்டிலிருந்து எதிரியின் ஆதனத்துக்குப் போகவிடப்பட்ட 10 அடி ஒழுங்கை நீளமும்

பதிவு இல: D 283/264

மா. முருகேசு, J.P.
கொம்மிஷனர், விலைமதிப்பாளர்
"இந்திர பவனம்"
புங்குடுதீவு, 2:-7-70.
எம். 226 21-8-70

---

## சைவப் பணி புரிய

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி விசேடத்தைச் சைவப்பணியின் மாண்பைக் கூறிமுடிக்க நம் ஒரு நா பேதாது. அதனை உலகமே, சைவத் தமிழ்ப் பேருலகமே யறியும். அக்கருத்தினை அவர்கள்பால் விடுத்து, அம்மையாரிடம் நான் விரும்பும் பணியொன்றினையமைத்து அன்னாரை வாழ்த்தியமைகின்றேன்.

மேலும் சைவப்பணி புரியச் சைவ மங்கையர்களை உருவாக்கித் தருதலே செல்வியவர்களின் பெருங் கடனாகும். அதனை நாம் வேண்டியதில்லை. "தானேதரும்" அங்ஙனம் அவர் திருவுள்ளம் அமையும் ஆக. செல்வியவர்கள் தம்பால் அமைந்த அருங்குணங்களோடு யாண்டும் வாழ்ந்து, தாம் வழிபடு தெய்வமாகிய மாரியம்மாளின் கருணையுடன் சைவச் சேவை படர்ந்து நீடு வாழ்க என்று பொன்னம்பலத் தெம்மான் பொன்னடி போற்றி அமைகின்றேன்

---

## COMMISSION SALE

### கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இலக்கம்: 10680
கரணவாய் வடக்கு,
சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை —வழக்காளி

எதிராக

கரணவாய் வடக்கு
நாகலிங்கம் கதிரித்தம்பி —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைபபடியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1970ம் ௵ புரட்டாதி மீ 14-ம் உ (14-9-70) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று கரணவாய் நவிண்டிற்குறிச்சியிறை கண்டலியன் தோட்டம் நிலப்பரப்பு 9 குளி 16¼ இதில் ஊடாகப்போகும் ரோட்டுக்கு வடக்குப் புறமாகவுள்ள நிலம் குளி 11 இது 1946ம் ௵ வைகாசி மீ 25ம் திகதி உலாந்தா மேஸ்தர் தா. சுப்பிரமணியத்தால் 10.5ம் இலக்கத்தில் வரைந்த டிஸ்திறிக் கோட்டு 2454ம் இலக்க வழக்கில் அணைக்கப்பட்டதுமாகிய படத்தின்படி 5ம் நம்பர்த் துண்டாகவிருக்கிறது. இதன் விசாலம் குளி 11, 47/64 எல்லை கிழக்கு பண்டாரம் நாராயணசாமியின் உரிமைக்காரருக்குடையவாதனம், வடக்கு வேலுப்பிள்ளை நடராசா பெண் இரத்தினத்திற்குடையவாதனம் மேற்கு ஒழுங்கை, தெற்கு ரோட், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் கிடக்கின்ற அங்கலிற் சொரியலாய் அரைவாசியும் பதிவு A 98/91

| | |
|---|---|
| தீர்வைத்தொகை: ரூ | 3343 75 |
| ரூ. 1750க்கு 29-10-69 தொடக்கம் 10 3-70வரை 10வீதவட்டி (5மாதம்) | 72 90 |
| ரூ. 3216-65க்கு 11-3-70 தொடக்கம் 6-6-70வரை 5வீத வட்டி (3 மாதம்) | 40 20 |
| கோட்டுச் செலவு ரூபா | 247 35 |
| மொத்தம் ரூபா | 3504 20 |

V. M கந்தசாமி
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
வல்வெட்டிததுறை
28-7-70 எம். 222 21-8.70